THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to have notice.

*211 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken steps to reduce the administrative expenditure; and

(*b*) if so, whether those steps will affect the efficiency in the administration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Attention is invited to the statement placed on the table of the house with reference to Legislative Assembly Question No. 210 (Starred).

(*b*) No, Sir.

திரு. எஸ். மாதவன் : பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு அனுப்பி யிருக்கிறதா ? அதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தே சம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுதிருக்கிற ஆசிரியர்களை எடுத்துவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு ஒன்றும் போடவில்லை. ஆனால், ஆசிரியர்கள், மாணவர்கள் எண்ணிக்கை விகிதாசாரம் நிர்ண யிக்கப்பட்டு, அது அனுசரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித் திருக்கிறது. ஆனால், அதற்காக இருக்கிற ஆசிரியர்களை வேலையிலிருந்து எடுத்து அனுப்பிவிட வேண்டுமென்ற யோசனையும் இல்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : இப்பொழுது பழைய ஸ்லாப் முறை மாறி ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற ரேஷியோ வந்த பிறகு பல ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி அரசாங்கத் தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சற்று முன்புதான் சொன் னேன். இப்பொழுதிருக்கிற ஆசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு சிக்கனத்தைக் கடைப் பிடிக்கலாம் என்பதை ஆராய்ந்து அறிய தனிக் குழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அதற்கென்று ஒரு தனிக் குழு அவசியம் இல்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

மருத்துவக் கல்லூரியில் அனுமதிப்பதற்கான வயது.

*213. கேள்வி—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பி.யு.ஸி. (P.U.C.) வகுப்பில் தேர்வுக்கான தற்போதுள்ள குறைந்த பட்ச வயதிற்கும், மருத்துவக் கல்லூரியில் அனுமதிப்பதற்கான குறைந்தபட்ச வயதிற்கும் ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதைப் போக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes. (*b*) The matter is under examination.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : பதினைந்து வயது ஆறு மாதம் முடிந்திருந்தால் காலேஜில் சேரலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பி.யு.ஸி. வகுப்பு முடிக்கும்பொழுது 15 வயது 4 மாதம் முடிந் திருக்கும். அப்படியிருக்கும்பொழுது மெடிகல் காலேஜில் சேருவதற்கு மட்டும் 16 வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 3 மாதம் அதிகப்